**01.04.2024 அ.வ.எண்.37/2014 வா.சா.3, ஐயப்பன் த/பெ. தனபால்**

**குறுக்கு விசாரணை**

எனது பாட்டனார் பெயர் கண்ண கவுண்டர். இந்த வழக்கின் 4-ம் பிரதிவாதி என் தந்தை தான். என் தந்தை தற்போது குறிப்பேடு கிராமத்தில்தான் வசிக்கிறார். வாதி வழக்கு சொத்து தனக்கு சொந்தம் என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் புல எண்.58/1ஏ ஆகும். அதன் மொத்த விஸ்தீரனம் 90 செண்ட் ஆகும். அதில் வாதி கேட்பது 20 செண்ட். வாதி கேட்கும் 20 செண்டுக்கு நான்கெல்லை வடக்கில் ஜெயராமன் நிலம், தெற்கில் மற்றும் கிழக்கில் கண்ண கவுண்டர் நிலம், மேற்கில் முனியம்மாள் நிலம் உள்ளது. வாதி இரண்டு கிரயமாக நிலம் வாங்கியுள்ளார். அதில் ஒன்று 1954-ல் ஏற்பட்டது மற்றொன்று எப்போது ஏற்பட்டது என்று தெரியாது. வாதி வழக்கிட்டுள்ள சொத்தை தற்போது அவர் மகன் பெயருக்கு எழுதியுள்ளார். மொத்த விஸ்தீரனம் 90 செண்ட்-ல் ஆதிமூல கவுண்டர் மகன் கண்ண கவுண்டருக்கு 7-1/2 செண்ட் சொந்தமானவை. ஜெயராமனுக்கு 5 செண்ட் சொந்தமானவை. என் பாட்டி முனியம்மாள் 9 செண்ட் கிரயம் வாங்கியுள்ளார். அவர் கிரயம் வாங்கியது 1973 அல்லது 1974 ஆக இருக்கும். என் பாட்டி வாங்கிய சொத்துக்கு கண்ண கவுண்டர் பெயருக்கு பட்டா உள்ளது. அந்த பட்டா எண் தெரியாது. என் பாட்டனார் கண்ண கவுண்டர் தந்தை பெயர் ஆதிமூல கவுண்டர். எனது பாட்டி சொத்துகளை அவரது ஐந்து பிள்ளைகள் பாகம் பிரித்துக் கொண்டனர். சீனிவாசன் என்பவர் என் சகோதரர். கிளியம்மாள் என்பவர் என் பாட்டிக்கு கிரயம் கொடுத்தவர் ஆவார். எனது அனுபவம் எவ்வளவு என கேட்டால் 9 செண்ட் மற்றும் 7-1/2 செண்ட். மொத்த விஸ்தீரனம் 90 செண்ட்-ல் வாதி மற்றும் தனபால் மற்றும் கோட்டமுத்து ஆகியோருக்கு சொந்தமான நிலம் போக மீதி எவ்வளவு விஸ்தீரனம் உள்ளது என கேட்டால் அது விவரம் தெரியாது. பட்டாவில் பெயர் நீக்கம் செய்தது 2015-ம் வருடமாகும். அதனை எதிர்த்து வருவாய்த் துறையிடம் நான் மனு கொடுக்கவில்லை. வரதப்ப செட்டியாரிடம் 1-ம் பிரதிவாதியிடம் கிரயம் வாங்கியது 2005-ம் ஆண்டு ஆகும். 1-ம் பிரதிவாதி இந்து ஒட்டர் செட்டி ஜாதியை சேர்ந்தவர் என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து புல எண் நிபந்தனை ஒப்படைவு செய்யப்பட்ட நிலம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்பது சரியல்ல.